தட்டும் ஒலி) இந்தப் பேரவையில் அவ்வாறுதான் முடிவெடுக்க வேண்டியிருக்கிறது. திரு. இராமசுவாமி.

3. கவன ஈர்ப்பு — தொடர்ச்சி

(அ) கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் சாலை பழுதடைந்துள்ளதால் போக்குவரத்தும், பொதுமக்களும் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டு, பொதுமக்கள் அவதியுறுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை, அவையில் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை

மேற்கண்ட கவன ஈர்ப்பு தீர்மானத்தில் குறிப்பிடும் கள்ளக்குறிச்சி- சங்கராபுரம் சாலை (கி.மீ.0/0-17/6) ஒரு பெரிய மாவட்ட சாலையாகும். இச்சாலை விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மற்றும் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்களை இணைக்கும் சாலையாகும். கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் மூங்கில் துறைபட்டு சர்க்கரை ஆலைக்கு கரும்பு ஏற்றிச் செல்லும் வாகனங்களால் இச்சாலையில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளது. இச்சாலையில் அடித்தள மண் களிமண்ணாக இருப்பதாலும், அதிக போக்குவரத்து நெரிசலின் காரணமாகவும், சிறு மழைக்குக்கூட இச்சாலை மிகவும் மோசமடைந்து விடுகிறது.

(2) இச்சாலையில், 11.70 கி.மீ. நீளம் ஒரு வழிப்பாதையாகவும், 5.90 கி.மீ. நீளம் இருவழிப்பாதையாகவும் உள்ளது. ஒரு வழிப்பாதையாக உள்ள 11.70 கி.மீ. நீளத்தில், 2.51 கி.மீ. நீளம் ரூ.8.32 லட்சங்கள் மதிப்பீட்டில் சாலையை அகலப்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் ரூ. 6.61 இலட்சங்கள் மதிப்பீட்டில் 1.70 கி.மீ. நீளத்திற்கு சாலையை அகலப்படுத்தும் பணிகள் 31-3-95-க்குள் முடிக்கப்படும். எனவே

31-3-95-க்குள், மொத்தம் உள்ள 11.70 கி.மீ. நீள ஒரு வழித்தட அகலமுள்ள சாலைப் பகுதியில் 4.21 கி.மீ. நீளப் பகுதிகளை இருவழித்தடமாக்கப்பட்டுவிடும். மீதமுள்ள 7.49 கி.மீ. நீள சாலைப் பகுதியில், 2 கி.மீ. நீள சாலைப் பகுதியை அகலப்படுத்தும் பணிகள் ரூ. 9.70 லட்சங்கள் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.

இவை தவிர, இச்சாலையின் 5.80 கி.மீ. நீளத்திற்கு மேம்பாட்டுப் பணிகள் ரூ. 10.75 இலட்சங்கள் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. 6.40 கி.மீ. நீளமுள்ள பகுதியில், ரூ. 18.25 லட்சம் மதிப்பீட்டில், மேம்பாட்டுப்பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும், 31-3-95-க்குள் முடிக்கப்படும். இப்பணிகள் யாவும் முடிக்கப்பட்டவுடன், இச்சாலை போக்குவரத்திற்கு ஏற்ற நல்ல நிலையில் இருக்கும்.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் பார்த்தேன். அந்த கள்ளக்குறிச்சி-சங்கராபுரம் சாலை, 11 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. அது மிகவும் பழுதடைந்துள்ளதால், அங்கே போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. மேற்படி சங்கராபும் சாலையில், விவசாயிகள் 5 முறை சாலை மறியல் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். ஆறாவது முறையாக சாலை மறியல் போராட்டம் நடத்தும்போது, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அசோக் குமார் குப்தா அவர்கள் சங்கராபுரம் வந்து, நேரடியாக அந்தப் பிரச்சினையில் தலையிட்டு, அந்தச் சாலையை உடனடியாக செப்பனிட்டுத் தருவதாக உறுதியளித்துள்ளார்கள். அந்தச் சாலை 7 கிலோ மீட்டர்தான் இப்போது போடப்பட்டுள்ளது. மீதமுள்ள 11 கிலோ மீட்டர் சாலை போட, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போன்று ஒரு பகுதி 7 கிலோ மீட்டர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. மீதமுள்ள 6½ கிலோ மீட்டர் பகுதிக்கு 18 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே, மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும், இந்த மாத இறுதிக்குள் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராமசுவாமி. (குறுக்கீடு)

திரு. அ. செல்வராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை நடவடிக்கைகள் போய்க் கொண்டிருக்கின்றன. உட்காருங்கள். திரு. இராமசுவாமி.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி-சங்கராபும் சாலையில், அரியபெருமான்-ஆலத்தூர் வரை ஒரு பெரிய ஏரி இருக்கிறது. அந்த ஏரியிலுள்ள களிமண், மழை பெய்தால், சாலையில் படிந்து விடுகிறது. அதனால், அந்தச் சாலை பாதிக்கப்பட்டுப் பாழாகிறது. அதுமட்டுமல்ல; சர்க்கரை ஆலைக்குச் செல்லும் கரும்புகள் அனைத்தும் அந்த வழியாகச் செல்வதால், அது அடிக்கடி பாதிக்கப்படுகிறது. எனவே, அந்த அரியபெருமான்-ஆலத்தூர் வரை செல்கிற அந்தச் சாலையில், அந்த ஏரிக்கரை அருகிலே ஒரு தடுப்புச் சுவர் கட்டுவதால், அந்தக் களிமண் அந்த ரோடுக்கு வராமல் தடுக்கப்படும். சங்கராபுரத்தில் இருக்கிற வியாபாரிகளுக்கும் அந்தச் சாலைக்கும் சம்பந்தம் இல்லை. அவர்கள் பொழுதுபோக்காக, அடிக்கடி அங்கு சாலை மறியல் செய்கிறார்கள். இந்த ஆட்சிக்குக் கெட்ட பெயர் கொண்டு வரவேண்டுமென்று அங்கு சாலை மறியல் செய்கிறார்கள். எனவே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள், உடனடியாக அநதச் சாலையைச் செப்பனிட ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சங்கராபுரம் பகுதியில் பல கோடிக்கணக்கான ரூபாய் அளவில் சாலை வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பது, உறுப்பினருக்கே நன்றாகத் தெரியும். அந்தச் சாலை வழியாக, கரும்புகளை ஏற்றிச் செல்கிற காரணத்தினால், அடிக்கடி வாகனங்கள் செல்கிற காரணத்தினால், கொஞ்சம் பழுதுபட்டிருக்கிறது. சாலையின் கீழே களிமண்ணாக இருக்கிற காரணத்தினால், சில undulation—அதாவது, மேடுபள்ளம் ஏற்படுகிறது. ஆகவே, இதை நிரந்தரமாக தீர்வு செய்வதற்காகத்தான் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, ஏற்கனவே ஒரு பகுதி பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மீதமுள்ள பணிகளும் இந்த மாத இறுதிக்குள் முடிக்கப்படுமென்று தெரிவித்திருக்கிறேன். மேலும் பற்றாக்குறை இருக்குமானால், அந்தச் சாலையை பராமரிப்பதற்கான நடவடிக்கைகளை நெடுஞ்சாலை துறை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு (குறுக்கீடுகள்)

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) முன் அனுமதியில்லாமல் ஒரு பிரச்சினையை எழுப்புதல்

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

திரு. அ. செல்வராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை நடவடிக்கை போய்க் கொண்டிருக்கிறது. இவ்வாறு போய்க் கொண்டிருக்கும்போது (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பிரச்சினை இல்லை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்பில் ஒரு பிரச்சினை போய், இன்னொரு பிரச்சினை போய்க் கொண்டிருக்கும்போது, எப்படி நீங்கள் குறுக்கே வரமுடியும்? (குறுக்கீடு) எதுவாக இருந்தாலும் இந்தத் தருணத்தில் எப்படி வரமுடியும்? ஒரு உறுப்பினருடைய கவன ஈர்ப்புத் தீர்மானம் முடிந்து, இன்னொரு உறுப்பினருடைய கவன ஈர்ப்புத் தீர்மானம் போய்க் கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும். திரு. தாமரைக்கனி, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. தாமரைக்கனி.

3. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, எஸ். இராமச்சந்திரபுரம் அருகே உமையாள் ஸ்பின்னர்ஸ் லிமிடெட் நிர்வாகம் 400 தொழிலாளர்களை திடீரென்று வேலை நீக்கம் செய்ததால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, எஸ்.இராமச்சந்திரபுரம் அருகே உள்ள உமையாள் ஸ்பின்னர்ஸ் லிமிடெட் நிர்வாகம் எந்தவித முன்னறிவிப்பின்றி 400 ஆண், பெண் தொழிலாளர்களை திடீரென்று வேலைநீக்கம் செய்தது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், எஸ். இராமச்சந்திரபுரத்தில் உமையாள் ஸ்பின்னர்ஸ் (பி) லிமிடெட் என்ற நூற்பாலை தற்போது 102 தொழிலாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. இந்நூற்பாலையில் பணிபுரிந்து வந்த 7 தொழிலாளர்கள் மட்டுமே நிர்வாகத்தின் ஒழுங்கு நடவடிக்கை காரணமாக வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

மேற்படி நூற்பாலையில் பணிபுரிந்து வந்ததாக கூறும் 400 தொழிலாளர்களின் வேலை நீக்கம் பற்றிய தொழிற்தாவா ஏதும் நிலுவையில் இல்லை. தொழிலாளர்கள் 1947-ம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின்படி முறையாக தொழிற்தாவா ஏதும் எழுப்பினால் தொழிலாளர் நலத்துறை இது குறித்து விசாரித்து, தக்க நடவடிக்கை எடுத்து தொழிற்தாவாவை தீர்த்து வைக்க அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கையை நான் பார்த்தேன். 13 ஆண்டுக்காலமாக உமையாள் ஸ்பின்னிங் மில்லில் இந்தத் தொழிலாளர்கள் வேலை பார்க்கின்றார்கள். இதில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் சென்னையில் உள்ள அண்ணா தொழிற்சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளார்கள். மாவட்ட அண்ணா தொழிற்சங்கத்துடனும் இணைக்கப்பட்டுள்ளது. ஆனால், 1½ வருட காலமாக, 29-1-1994 முதல் 27-2-1995 வரை, 20 வாய்தாக்கள் இராஜபாளையம் தொழிலாளர்கள் கோர்ட்டில் போடப்பட்டுள்ளன. மற்றும் D.C.L.-ல் இரண்டு வாய்தாக்கள் போடப்பட்டுள்ளன. அரசுக்கு அடிபணியாமல் அந்த நிர்வாகம் இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் நேரிடையாகத் தலையிட வேண்டும். இது சம்பந்தமாக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நான் தெரியப்படுத்தியிருக்கிறேன். அவர்களும் ஆவன செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தொழிலாளர்கள் பிரச்சினையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக

உறுப்பினர் இன்னாசி முத்து என்பவரை ** இது சம்பந்தமாக விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, உடனடியாக...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) அது நீதி மன்றத்திலே தீர்மானிக்க வேண்டிய விஷயம். அது வேண்டாம்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, ஏன் சொல்லக்கூடாது? **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி, கவன ஈர்ப்பிலே இதெல்லாம் வராது. தொழிலாளர் பிரச்சினை மட்டும்தான் வரும். மற்றவற்றிற்கெல்லாம் போலீஸ் நடவடிக்கை எடுப்பார்கள். அதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். அண்ணா தி.மு.க ஆட்சியில், புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் 1½ வருட காலமாக அண்ணா தொழிற்சங்கக்காரர்கள் தொழிற்சங்கம் அமைத்ததற்காக வேலை இல்லாமல் இருக்கிறார்கள். தொழிற்சங்கம் அமைக்கவே அந்த நிர்வாகி ஒத்துக்கொள்வது கிடையாது. ஆகவே, உடனடியாக வேலை கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா? தொழிற்சங்கம் அமைத்ததுதான் காரணமே தவிர, வேறு எந்தக் காரணமும் கிடையாது. பேக்டரி ஆக்ட் பிரகாரம் தொழிலாளர்கள் ஒன்றும் கேட்கவில்லை. பேக்டரி ஆக்ட்படி சட்டதிட்டங்களும் அங்கே கிடையாது. தொழிலாளர்கள் கூலி உயர்வும் கேட்கவில்லை. ஒன்றுமே இல்லாமல், இப்படி வேலை நீக்கம் செய்வது மிகவும் பரிதாபமாக இருக்கிறது. பட்டினியால் வாடுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணைக்கேற்ப தொழிலாளர்கள் வாழ்வில் ஒளியேற்றுவீர்களா? அந்த முதலாளி தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்காவிட்டால் அவர்களுடைய லைசென்ஸைக் காலி பண்ணி, அரசாங்கமே தொழிற்சாலையை நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: பேரவைத் தலைவர் அவர்களே, 19-1-94 அன்று நிர்வாகம் ஒரு தொழிலாளியை அடித்துவிட்டதாகக் கூறி அன்று பிற்பகல் 5.30 மணி முதல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

செய்தனர். விருதுநகர் இந்திய தொழிற்சங்க மையம், விருதுநகர் தொழிலாளர் அலுவலருக்கு 24-1-1994 அன்று தெரிவித்துள்ளது. 29-1-1994 அன்று தொழிலாளர் அலுவலர் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். தொழிற்சங்கம், சங்க அங்கீகாரம் உட்பட பல்வேறு பொதுக் கோரிக்கைகளை வலியுறுத்தியுள்ளது. சுமூகமான உடன்பாடு ஏற்படவில்லை. எனவே, தொழிலாளர் ஆணையர் 7-3-1994 தேதியிட்ட கடிதம் மூலம் மதுரை தொழிலாளர் துறை துணை ஆணையரை இதில் தலையிடக் கோரியுள்ளார். தொழிலாளர்கள் படிப்படியாக பணிக்குத் திரும்பினர். 26-4-1994 முதல் மில் வழக்கம்போல் இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிர்வாகம் அரசுக்குக் கெட்ட பெயரை ஏற்படுத்துகிற வண்ணம் செயல்படுகிறது. தொழிலாளர் சம்பந்தப்பட்ட கீழ்மட்ட, உயர்மட்ட அதிகாரிகள் எல்லாம் 2-சி தொழிலாளர் தகராறு சட்டத்தின் அடிப்படையில் ஒரு வருடம், ஆறு மாதம் தொழிலாளர் கோர்ட்டுக்குப் போனால் அப்படியே கிடப்பில் கிடந்து விடுகிறது. எந்தக் காரணமும் கிடையாது. கோரிக்கையும் கிடையாது. தொழிற்சங்கம் அமைத்ததற்காகத்தான் வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். படுபாவம் செய்திருக்கிறார்கள். ஆகவே, அண்ணா தி.மு.க. அரசு—இந்த அரசு, தொழிலாளர்களுக்கு, தொழிற்சங்க அலுவலர்களுக்கு வேலை கொடுக்க ஒரு குறிப்பிட்ட டயம் சொல்லி, வேலை கிடைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? இல்லாவிட்டால், ஏற்கனவே நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் தெரியப்படுத்தியிருக்கிறேன். இன்னமும் தெரியப்படுத்துவேன். நீங்கள் கவனமாக நடவடிக்கை எடுக்க வேண்டும், கவன ஈர்ப்புத் தீர்மானத்தில்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. தாமரைக்கனி இது விஷயமாக 232 தொழிலாளர்களின் பெயர்ப் பட்டியலை 14-3-1995 அன்று தொழிலாளர் ஆணையரிடம் கொடுத்துள்ளார். வேலை நீக்கம் குறித்து தொழில் தாவா எழுப்பவில்லை. சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் தனித்தனியாகவோ, சங்கம் மூலமாகவோ தொழில் தாவா எழுப்பினால் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது அரசு, பரிவோடும், நிறைவோடும் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) முன் அனுமதி இல்லாமல் ஒரு பிரச்சினையை எழுப்புதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இளம்வழுதி, இந்த ஸ்டேஜில் என்ன பிரச்சினையைச் சொல்லுகிறீர்கள்? (குறுக்கீடு) திரு. இளம்வழுதி.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, கடலூர், வேலூர், திருச்சி போன்ற பகுதிகளில் கடந்த இரண்டு நாட்களாக இரவு 8.30 மணி அளவில், அதுவும் . . . .

முற்பகல் **11-40**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முன்பே அறிவிப்புக் கொடுத்திருந்தீர்களானால் இதை எடுத்திருக்கலாம். (குறுக்கீடு) நாளைக்கு அறிவிப்புக் கொடுங்கள். அறிவிப்பே கொடுக்காமல் எப்படி எழுப்பமுடியும்? (குறுக்கீடு) நாளைக்கு அறிவிப்புக் கொடுங்கள். எடுக்கலாம். (குறுக்கீடு) மாண்புமிகு நிதி அமைச்சர்.

* *மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானம் மாண்புமிகு உறுப்பினர் ஒருவரால், கொடுக்கப்பட்டு, அதற்கு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் விடை அளித்தார்கள். இதிலே என்ன ஒழுங்குப் பிரச்சினை இருக்கிறது. ஒழுங்குப் பிரச்சினையைத் தவிர வேறு எந்தப் பிரச்சினையையும் இப்போது எழுப்புவதற்கு வாய்ப்புக் கிடையாது, அதற்கான தன்மையும் கிடையாது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது எழுப்ப முடியாது. திரு. இளம்வழுதி இப்போது திடீரென்று எழுந்து ஒரு பிரச்சினையைக் கிளப்ப முடியாது. பாயின்ட் ஆப் ஆர்டர் ஆகத்தான் இடையிலே ஏதாவது வரலாம். திரு. தாமரைக்கனி எழுப்பினதிலோ அல்லது அமைச்சர் சொன்னதிலோ ஏதாவது பாயின்ட் ஆப் ஆர்டர் இருந்தால்தான் எழுப்பமுடியும். வேறு ஒன்றும் இதிலே வராது. உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. செல்வராசன், நீங்கள் என்னிடம் எழுதி கொடுத்துவிட்டுக் கேளுங்கள். எழுதிக் கொடுத்தால் நான் எடுப்பேன். (குறுக்கீடு) பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் வராது. நீங்கள் எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை. (குறுக்கீடு) திடீரென்று எழுப்ப முடியாது. (குறுக்கீடு) எந்தக் கருத்தும் சொல்வதற்கு முன்அனுமதி பெற்றிருக்க வேண்டும். பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

திரு. அ. செல்வராசன்: வெளிநடப்புச் செய்கிறேன்.

(திரு. அ. செல்வராசன் வெளிநடப்புச் செய்தார்.)

4. அறிவிப்பு

மானியக் கோரிக்கைகள், 1995-96 — அவையில் முன்மொழிதல் குறித்து (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1995-96— ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடத்திலிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

" In pursuance of Clause 3 of Article 203 of the Constitution of India, I, M. Channa Reddy, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly, of the Demands for Grants for the financial year, 1995-96.".

5. மானியக் கோரிக்கைகள், 1995-96, விவாதமும் வாக்கெடுப்பும்

(அ) கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1995-96 ஆம் ஆண்டுக்கான மானியக்கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 11, மாவட்ட நிருவாகம், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக்கோரிக்கையின் கீழ் ரூ. 253,42,89,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள், வெட்டுத் தீர்மானம் எண் *636*, திரு. ஆர். சிங்காரம்.